II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S. No. 377/2022**

Deposition of witness for the Plaintiff / PW 1
Respondent solemnly by S. Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on 19.10.2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Tamil Selvan | Caste | : | |
| Father's / Husband's Name | : | Shanmugam | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை—

நான் இந்த வழக்கின் வாதி. என்னுடைய பிரமாண பத்திரத்தின் விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை. அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். வாதி தரப்பு ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. ரூ.25 லட்சம் பெற்றுக்கொண்டு 13.02.2020 தேதியில் பிரதிவாதி என் பெயருக்கு எழுதிக்கொடுத்த தாவா சொத்து சம்மந்தமான எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட சாதாரண அடைமான பத்திரம் வா.த.சா.ஆ1.

2. ரூ.11 லட்சம் பெற்றுக்கொண்டு 19.08.2020ல் என் பெருக்கு பதிவு செய்து கொடுத்த அடமான பத்திரம் வா.த.சா.ஆ2.

3. 05.12.2020ல் ரூ.5 லட்சம் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த சாதாரன அடைமான பத்திரம் வா.த.சா.ஆ.3.

4. 22.04.2022 தேதியில் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் மற்றும் அஞ்சலக ரசீது வா.த.சா.ஆ.4.

5. அதை பெற்றுக்கொண்டு பிரதிவாதி தனது வழக்களுர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு வா.த.சா.ஆ5.

6. அதற்கு எனது வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் வா.த.சா.ஆ6.

7. அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை வா.த.சா.ஆ.7.

அதற்கு இதனால் வரை பதிலும் கொடுக்கவில்லை. அசல் வட்டியுடன் பணமும் கொடுக்கவில்லை. தாவா தாக்கல் செய்தேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மறுவிசாரணை இல்லை.